அசல் வழக்கு எண்.40/2010 நாள்: 16.06.2026

வா.சா.4 திருமதி. அமராவதி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>

எனது கணவரின் கையொப்பத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டி உறுதி செய்ய முடியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4–ல் உள்ள 1வது சாட்சி கையொப்பம் எனது கணவர் மதியழகனுடையதுதான்.

| | | |
|---|---|---|
| 1 | சா.சா.ஆ.4 | மதியழகன் இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. எனது கணவர் எந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டதற்கு நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் வின்செண்ட் என்பவர் இடம் வாங்கிய பத்திரத்தில் எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். எனது கணவரை யார் அழைத்து சென்றது என்றால் வின்செண்ட்தான அழைத்து சென்றார். எனது கணவர் கையொப்பத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எனது கணவர் செய்தாரா அல்லது எனது கணவர் கையொப்பத்தை வின்செண்ட் போட்டாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு நிரந்தரமாக குடிப்பழக்கம் உண்டு என்றால் எப்போதாவதுதான் குடிக்கும் பழக்கம் உள்ளது.

2) சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லும்போது எனது கணவர் குடித்துவிட்டு சென்றாரா குடிக்காமல் சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் குடிக்காமல் சென்றார், எங்கு சென்றாலும் எனது கணவர் குடிக்காமல் செல்வார், சென்ற வேலை முடிந்தபிறகு வீட்டிற்கு வந்துதான் குடிப்பார். எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் ஆவணத்திலுள்ள சொத்து அமைந்துள்ள இடம் எங்குள்ளது என்றால் கள்ளப்பெரம்பூர், மாதாகோவில் தெருவிலுள்ளது. நாங்கள் எங்கு குடியிருக்கிறோம் என்றால் அதே ஊர் வடக்குதெருவில் வசிக்கிறோம். மேற்படி மாதாகோவில் தெருவில் வீடு, தோட்டம் எது முன்பக்கம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை தவிர வின்செண்ட் என்பவருக்கு வேறொரு இடத்தில் மாடிவீடு உள்ளது என்றால் சரிதான்.

3) அந்த சமயத்தில் எனது கணவர் எந்தெந்த ஊருக்கு சாட்சி கையொப்பம் செய்ய போனார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்பட்ட சமயம் எனது கணவருடன் யார்யார் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1–ல் உள்ள எனது கணவரின் கையொத்திற்கும், வா.சா.ஆ.4–ல் உள்ள எனது கணவரின் கையொப்பத்திற்கும், ஒவ்வொரு எழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல, கையொப்பம் சரியாகதான் உள்ளது. வா.சா.ஆ.4 பதிவு செய்யப்படும் சமயம் எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும், மது அருந்திவிட்டு வீட்டில் படுத்துக்கொண்டார் என்றாலும் எனது கணவரின் கையொப்பத்தை வாதி வின்செென்ட் போட்டுக்கொண்டார் என்றாலும் சரியல்ல. எனது அன்றாட செலவிற்கு வாதி வின்செென்ட் பணம் கொடுத்தால்தான் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Amaravathi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.16 06:30:53 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU